Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

| | | |
|---|---|---|
| Deposition of P.W. 14 (L.W. 23 ) | } Prosecution<br>} Defence<br>} | |
| Name of the Witness | : | திரு.கணேசன் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 19.12.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் பெரும்பாலை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வளாராக பணிபுரிந்து கடந்த 20223ல் பணி ஓய்வு பெற்று தற்போது

தருமபுரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 29.05.2022ல் பெரும்பாலை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது ஏரியூர் வட்ட காவல் ஆய்வாளர் பெரும்பாலை காவல் நிலைய குற்ற எண் 72/2022 சட்டபிரிவு 341, 302 இதச வழக்கில் கொலையுண்டு இறந்து போன கந்தசாமி என்பவரின் பிரேத விசாரணையின் போது ஆய்வாளருடன் இருந்தேன். ஆய்வாளர் என்னிடம் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தையும், பிரேதத்தையும் சடல கூராய்வு செய்வதற்காக கடவு சீட்டை பெற்று 13.15 மணிக்கு ஒப்புவித்ததை நான் பெற்று 20.05.2022ம் தேதி 15.45 மணிக்கு அலுவலில் இருந்த சட்டம் சார்ந்த மருத்துவா் அவர்களிடம் வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தும், சவக்கிடங்கில் இருந்த பிரேதத்தை அடையாளம் காட்டினேன். பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தேன். பிரேத பரிசோதனைக்கு பின் என்னிடம் ஒப்புவித்த கொலையுண்டு இறந்து போன கந்தசாமியின் பிரேதத்தை அவரது உறவினர் வசம் ஒப்புவித்தேன்.

2) பிரேத பரிசோதனைக்கு பின் என்னிடம் ஒப்புவித்த கொலையுண்டு இறந்து போன கந்தசாமியின் பிரேதத்தை அவரது உறவினா் வசம் ஒப்புவித்தேன். பிரேத பரிசோதனையின் போது மருத்துவா் என்னிடம் ரத்தகறை படிந்த சிவப்பு கலா் அரைகை

சட்டை, இரத்தக்கறை படிந்த நீலம், வெள்ளை பொடி கலர் கட்டம் போட்ட லுங்கி, இரத்தக்கறை படிந்த காபி கலர் டிராயர் டைப் ஜட்டி, ரத்தக்கறை படிந்த வெள்ளை கட்டம் போட்ட துண்டு, வெள்ளி அரைஞான் கொடி இவைகளை என்னிடம் ஒப்புவித்ததை நான் பெற்று தனி அறிக்கையுடன் ஏரியூர் வட்ட காவல் ஆய்வாளரிடம் ஒப்புவித்தேன். கொலையுண்டு இறந்து போன கந்தசாமியின் பிரேத பரிசோதனையின் போது உடலில் இருந்த சேகரம் செய்து வைக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புளை தருமபுரி அரசு மருத்துவமனையிலிருந்து பெற்று தருமபுரி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்புவித்து அதற்குண்டான சான்று பெற்று வந்தேன். காவல் ஆய்வாளர் உத்தரவுபடி 31.05.2022ம் தேதி படிவம் 91 மூலமாக என்னிடம் ஒப்புவித்ததை நான் பெற்று நீதிமன்றத்தில் ஒப்புவித்து வழக்கு சொத்து எண் 138/2011 பெற்று வந்தேன்.

3) பிரேத விசாரணை செய்ய வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.11** ஆகவும், ரத்தகறை படிந்த சிவப்பு கலர் அரைகை சட்டை **சா.பொ. 9** ஆகவும், இரத்தக்கறை படிந்த நீலம், வெள்ளை பொடி கலர் கட்டம் போட்ட லுங்கி **சா.பொ. 10** ஆகவும், இரத்தக்கறை படிந்த காபி கலர் டிராயர் டைப் ஜட்டி **சா.பொ.11** ஆகவும், ரத்தக்கறை படிந்த வெள்ளை கட்டம் போட்ட துண்டு **சா.பொ.12** ஆகவும், வெள்ளி அரைஞான் கயிறு

(Valuable Boxல் உள்ளது) **சா.பொ.13** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஆய்வாளர் பிரேத விசாரணையை தருமபுரி அரசு மருத்துவமனையில் செய்தார். சம்பவ இடத்தில் தான் பிரேத விசாரணை செய்ததாக பிரேத விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பிரேத விசாரணை செய்யும் போது உடனிருந்தேன்.

Sd/Tmt.U.Monica, M.L
Additional District Judge,
Dharmapuri.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

Deposition of P.W. 15 (L.W. 26 ) } Prosecution } Defence }

Name of the Witness : திரு.மதியழகன்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 19.12.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது காரிமங்கலம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 29.05.2022ம் தேதி

பெரும்பாலை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காலை 08.00மணிக்கு சகுந்தலா வயது 48 க/பெ கந்தசாமி நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான கொடுத்த புகாரை பெற்று பெரும்பாலை காவல் நிலைய குற்ற எண் 72/2022 சட்டபிரிவு 341, 302 இதசவாக வழக்கு பதிவு செய்தேன். அசலையும், புகாரையும் பென்னாகரம் நீதிமன்ற நடுவர் அவர்களுக்கு துரித தபால் மூலம் அனுப்பியும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக ஏரியூர் காவல் வட்ட ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எழுதிய புகாரை தான் என்னிடம் காவல் நிலையத்தில் வந்து கொடுத்தார்கள். புகார்தாரரும், அவருடன் அவரது உறவினர்கள் 3 பேர் வந்தார்கள். புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய 1=/2 மணி நேரமானது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உடனே நான் நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டேன். 09.00மணிக்கு முன்பாகவே அனுப்பி விட்டேன். பெரும்பாலை காவல் நிலையலிருந்து பென்னாகரம் நீதிமன்றத்திற்கு 26 கிமீ தூரம், இரு சக்கர வாகனத்தில் போனால் ஒரு

மணி நேரமாகும். நான் சொல்வது போல் காலை 9 மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றாலும், மதியம் 2 மணிக்கு தான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பகல் 3.20மணிக்கு தான் நீதித்துறை நடுவர் அதை பெற்றுள்ளார் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L
Additional District Judge,
Dharmapuri.